# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் 21/மா/2026**

**நாள் 30.06.2026**

இரா. ஜெயராம்
சென்னை–600 063 --- முறையீட்டு மனுதாரர்

(1) ஆணையர்
தாம்பரம் மாநகராட்சி
(2) S. ராஜேஸ்வரி,
உரிமையாளர், ஸ்ரீராதா மஹால்
புதுபெருங்களத்தூர், தாம்பரம்
(3) N.R.R. லட்சுமிகாந்தன்,
உரிமையாளர்,
ஸ்ரீபாலாம்பிகை பார்ட்டி ஹால்
புதுபெருங்களத்தூர், தாம்பரம்
(4) கோமதி இளங்கோ, மேற்பார்வையாளர்
கஸ்தூரி சண்முகம் திருமண மண்டபம்,
புதுபெருங்களத்தூர், தாம்பரம். --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 063, புது பெருங்களத்தூர், ஆர்.எம்.கே நகர், என்.ஜி.ஓ. காலனி, 4வது தெரு, கதவு எண் 43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. ஜெயராம் என்பவரின் 29.12.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.12.2025 அன்று பெறப்பட்டு 21/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 063, புது பெருங்களத்தூர், ஆர்.எம்.கே நகர், என்.ஜி.ஓ. காலனி, 4வது தெரு, கதவு எண் 43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. ஜெயராம் என்பவர் தனது 29.12.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"1) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, பெருங்களத்தூர் கிராமம், கதவு எண் 10/50, கலைஞர் நெடுஞ்சாலையில் ஸ்ரீராதா மஹால் என்னும் பெயரில் தனியார் திருமண மண்டபம் அமைந்துள்ளது. மேற்படி திருமண மண்டபத்தில் கீழ் தளத்தில் ஐபாகோ (ibaco) என்ற ஐஸ்கீரீம் கடையும், மேல்தளத்தில் திருமண மண்டபமும் அமைந்துள்ளது. அதுபோல் க. எண் 12–ல் காமராஜர் நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீபாலாம்பிகை பார்ட்டி ஹால் என்னும் பெயரில் மற்றொரு தனியார் திருமண மண்டபம் உள்ளது. இந்த திருமண மண்டபத்தின் கீழ் தளத்தில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா என்ற வங்கியும் மேல் தளத்தில் பார்ட்டி ஹாலும் செயல்படுகிறது. அதேபோல் கதவு எண் 19 கலைஞர் நெடுஞ்சாலையில் கஸ்தூரி சண்முகா திருமண மஹால் என்ற பெயரில் மற்றொரு தனியார் திருமண மண்டபம் செயல்படுகிறது.

2) மேற்கண்ட திருமண மண்டபகங்கள் அமைந்துள்ள பகுதியில் தான் மாநகராட்சி அலுவலகம், அஞ்சல் அலுவலகம், ரயில் நிலையம், அரசு தனியார் பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் வணிக வளாகங்கள் உள்ளதால், இந்த சாலை மிகவும் பிரதான சாலை என்பதால் போக்குவரத்து வாகனங்கள் அதிகம் செல்லும் பகுதியாகும். இந்த சாலையினை தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் ரயில் நிலையம் செல்வதற்கு பயன்படுத்தி வருகின்றனர். பெருங்களத்தூர் நகரில் அதிகமான போக்குவரத்து வாகனங்கள் செல்லும் சாலையாக உள்ளது.

3) மேற்காணும் திருமண மண்டபகங்களில் நிகழ்ச்சிகள் நடைபெறும் சமயங்களில் மேற்படி திருமண மண்டபத்தில் முறையாக வாகனங்கள் நிறுத்துமிடம் இல்லாத நிலையில், மேற்கண்ட திருமண மண்டபகங்களில் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருபவர்கள் தங்களது வாகனங்களை சாலையில் நிறுத்தும் செய்வதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும் அந்த சாலையை பயன்படுத்தும் பொதுமக்கள் தங்களது வாகனங்களில் பயணிக்க மிகுந்த சிரமப்படுகின்றனர். மேலும் அவ்வழியாக பள்ளி கல்லூரி வாகனங்களும், இவ்வழியே செல்லமுடியாமல், பள்ளி மாணவ மாணவியர்கள் உரிய நேரத்திற்கு பள்ளி கல்லூரிக்கு செல்ல முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். மேலும் இந்த சாலையில் கடுமையான போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகிறது.

4) மேற்படி திருமண மண்டபங்கள் அனைத்தும் வர்த்தக கட்டிடம் என்பதாலும் 3,000 சதுர அடிக்கு கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடம் என்பதாலும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் திட்ட அனுமதி பெறவில்லை. மேற்கண்ட திருமண மண்டபகங்களின் உரிமையாளர்கள் உள்ளூர் பஞ்சாயத்தில் திட்ட அனுமதி பெற்றுள்ளார்கள். அவ்வாறு அவர்கள் பெற்ற திட்ட அனுமதிக்கு மாறுதலாக கட்டிடம் கட்டியுள்ளார்கள். மேலும், மேற்படி திருமண மண்டபகத்தினை வணிக நோக்கத்திற்கான கீழ் பகுதியினை வாடகைக்கு விட்டுள்ளார்கள். மேலும் மேற்கண்ட திருமண மண்டபகங்கள் அனைத்தும் நான்கு பக்கமும் போதிய இடைவெளி விடாமல் உள் வளாகத்திலேயே வாகன நிறுத்தம் வசதி இல்லாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

5) மேற்படி திருமண மண்டபகங்கள் அனைத்திற்கும் சொத்துவரி குடிநீர் கட்டணம், சுகாதார சான்று போன்ற இனங்களில் மாநகராட்சி மண்டல அதிகாரிகளால் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்ட அனுமதிக்கு மாறான திருமண மண்டபகங்களின் கட்டிடத்திற்கு அரையாண்டு சொத்துவரி முறைகேடாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு அனுமதியற்ற திருமண மண்டப கட்டிடத்திற்கு வரிவிதிப்பு ரசீது வழங்கிய சம்பந்தப்பட்ட அலுவலர் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன். மேற்படி திருமண மண்டபகங்கள் அனைத்தும் அரசின் விதியை பின்பற்றாமல்

முறைகேடாக தொடர்ந்து இயங்கி வருகிறது. மேற்படி திருமண மண்டபத்திற்கு முறையாக அரசு ஆவணங்களும் ஏதும் இல்லை மேற்படி திருமண மண்டபங்கள் செயல்பட தகுதியில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

6) மேற்படி திருமண மண்டபங்கள் அனைத்தும் முறையான கட்டிட திட்ட அனுமதிக்கு புறம்பாக அனுமதியற்ற கட்டுமானப் பகுதியில் இயங்கி வருவதாக கடந்த 12.09.2025 தேதியன்று மேற்படி எதிர்மனுதாரருக்கு அவர்களுக்கு பதிவு அஞ்சல் வாயிலாகவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு ஆன்லைன் (TN/MAWS/CPT/I/PORTAL/14OCT2025/15583355) வாயிலாக கடந்த 27.9.2025 தேதியன்றும் புகாரளித்தும் மேற்படி புகார் மனு சம்பந்தமாக மேற்படி எதிர்மனுதாரர் அலுவலகத்தின் நகரமைப்பு பிரிவு அதிகாரிகள் இதுநாள் வரை எனது புகார் மனுவின் மீது சரியான நடவடிக்கை எடுத்துப் போகவில்லை. மேலும், அரசு விதிமுறைகளுக்கு புறம்பாக இயங்கி வரும் மேற்கண்ட திருமண மண்டபகங்கள் மீது தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 & 57–ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

7) மேற்படி கட்டுமானத்தின் மீது உதவி நகர திட்டமிடுநர் L ஜெயசங்கர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் சுவாமி நாதன் ஆகியோர் இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலும் பணியில் அலட்சியத்துடனும், மெத்தன போக்குடனும், அதிகார ஆணவத்துடன் இருந்து வருகிறார்கள். இவ்வாறு மாநகராட்சியில் கட்டிட திட்ட அனுமதிக்கு மாறான அனுமதியற்ற கட்டுமானத்தின் மீது நடவடிக்கை எடுக்க தவறிவரும் உதவி நகர திட்டமிடுநர் L ஜெயசங்கர் போன்ற நபர்களால் தமிழக அரசிற்கும் தாம்பரம் மாநகராட்சி நிர்வாகத்திற்கும் வருமான இழப்பு ஏற்பட்டு வருகிறது. மேலும் மேற்படி திருமண மண்டபங்கள் அனைத்தும் எதிர்மனுதாரர் மற்றும் அவரது அலுவலகத்தின் உதவி நகர திட்டமிடுநர் (நகரமைப்பு பிரிவு), நகரமைப்பு ஆய்வாளர், கிளார்க் ஆகியோரின் ஆதரவுகளுடன் தொடர்ந்து முறைகேடாக இயங்கி வருகிறது. மேற்படி திருமண மண்டபகங்கள் மீது மாநகராட்சிகள் சட்டத்தின் கீழ் எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. மேற்கண்ட அனுமதியற்ற கட்டுமானத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்காமல் இருந்து வரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

8) மேற்கண்ட திருமண மண்டபகங்கள் அனைத்தும் விதிமுறைகளுக்கு புறம்பாக வணிக நோக்கத்துடன் இயங்கி வருகிறது. மேலும், தமிழ்நாடு பொது கட்டடம் (உரிமம்) 1965, பிரிவு 2(8)–இன்படி வருவாய் துறையிடம் உரிமம் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக திருமண மஹால்கள் செயல்பட்டு வருகிறது. மேலும், மேற்படி திருமண மண்டபங்கள் எவ்வித அடிப்படை வசதிகள் இன்றியும், கட்டிட அனுமதிக்கு மாறுதலாக கட்டிடம் கட்டியுள்ளதால், மாநகராட்சிகள் சட்டப்பிரிவு 296(1), (2),(3) இன்படியும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட வசதிகள் 2019 விதி 35(4), 39(5), 53 & 64 (1), (2), (3)–களின் படியும் மற்றும் The Tamil Nadu Town and Country Planning (Removal of unauthorized Development) Rules. 2022 விதி 3–ன்படியும், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவுகள் 56 மற்றும் 57 இன் கீழ் அனுமதியற்ற கட்டுமானத்தின் மீது அமலாக்க நடவடிக்கை எடுக்க மாநகராட்சி மண்டல நகரமைப்பு பிரிவு அதிகாரிகளுக்கு உத்திரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

எனவே, மேன்மைமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் கிருபை கூர்ந்து மேற்படி அனுமதியற்ற திருமண மண்டபங்கள் தொடர்ந்து இயங்குவதை தடை செய்திட உரிய உத்தரவுகளை பிறப்பிக்குமாறு தங்களை மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.''.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 04.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் தனது 09.03.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண் 996/2026/எப்1–ம4–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

"திரு. இரா. ஜெயராம் அவர்களின் முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பெருங்களத்தூர் கிராமம் கதவு எண் 10/50, கலைஞர் நெடுஞ்சாலையில் ஸ்ரீராதா மஹால் என்னும் பெயரில் உள்ள திருமண மண்டபம், க. எண் 12, காமராஜர் நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீ பாலாம்பிகை பார்ட்டி ஹால் என்னும் பெயரில் உள்ள திருமண மண்டபம் மற்றும் க. எண் 19, கலைஞர் நெடுஞ்சாலையில் கஸ்தூரி சண்முகம் திருமண மண்டபங்கள் அனைத்தும் அனுமதியற்ற/அனுமதிக்கு மாறுதலாக கட்டப்பட்டு இயங்கி வருவதாக தெரிவிக்கப்பட்ட புகார் மனுக்களின் மீது உரிய நேராய்வு செய்து அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடத்தினை அனுமதியின்படி மாற்றியமைக்க கோரிய அறிவிப்புகள் ஸ்ரீராதா மண்டப உரிமையாளர் திருமதி D. கிருத்திகா, S. ராஜேஸ்வரி அவர்களுக்கும் மற்றும் ஸ்ரீ பாலாம்பிகை பார்ட்டி ஹால் உரிமையாளர் திரு. N.R.R. லஷ்மிகாந்தன் அவர்களுக்கும் திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 133(5), 135 (1), (2)–ன் கீழ் அறிவிப்புகள் வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேலும் அனுமதியின்றி கட்டப்பட்ட கஸ்தூரி சண்முகம் திருமண மண்டபத்தின் உரிமையாளர் திருமதி கோமதி இளங்கோ என்பவருக்கு அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் பயன்பாட்டினை தொடராமல் இருக்கவும், விதிகளின்படி வரைபடத்துடன் உரிய கட்டிட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பிக்க கோரிய திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 133 (5), பிரிவு 135(1), (2)–ன்கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு உரிய நடவடிக்கையில் உள்ளது. புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து கட்டிடங்களின் மீது உரிய நேராய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது."

4. மனுதாரரின் மனு தொடர்பாக மனுதாரர், முதல் எதிர்மனுதாரர், இரண்டாம் எதிர்மனுதாரர், மூன்றாம் எதிர்மனுதாரர் மற்றும் நான்காம் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 04.06.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 04.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"1) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, பெருங்களத்தூர் கிராமம், கதவு எண் 10/50, கலைஞர் நெடுஞ்சாலையில் ஸ்ரீராதா மஹால் என்னும் பெயரில் தனியார் திருமண மண்டபம் அமைந்துள்ளது. இந்த திருமண மண்டபத்தில் கீழ் தளத்தில் ஐபாகோ (ibaco) என்ற ஐஸ்கீரீம் கடையும், மேல்தளங்களில் திருமண மண்டபமும் அமைந்துள்ளது. இந்த கட்டிடமானது கட்டிட திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட வணிக கட்டிடம் ஆகும்.

2) க. எண் 12–ல் காமராஜர் நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீபாலாம்பிகை பார்ட்டி ஹால் என்னும் பெயரில் மற்றொரு தனியார் திருமண மண்டபம் உள்ளது. இந்த திருமண மண்டபத்தின் கீழ் தளத்தில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா என்ற வங்கியும் மேல் தளங்களில் பார்ட்டி ஹாலும் செயல்படுகிறது. இம்மண்டபம் திட்ட அனுமதிக்கு மாறாகவும், வணிக வளாகம் விதிமுறைகளுக்கு புறம்பாக பார்டி ஹாலாக மாற்றம் செய்துள்ளார்.

3) கதவு எண் 19 கலைஞர் நெடுஞ்சாலையில் கஸ்தூரி சண்முகா திருமண மஹால் என்ற பெயரில் மற்றொரு தனியார் திருமண மண்டபம் செயல்படுகிறது. மேற்படி கட்டிடம், கட்டிட திட்ட அனுமதி முற்றிலும் பெறவில்லை. இவ்மண்டபத்திற்கு அனைத்தும் இருபுறங்களிலும் அவசர கால வழிகள் ஏதும் விடாமல் செயல்படுகிறது.

4) மேற்படி திருமண மண்டபங்கள் அனைத்தும் வர்த்தக கட்டிடம் என்பதாலும் 3,000 சதுர அடிக்கு கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடம் என்பதாலும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் திட்ட அனுமதி பெற வேண்டும். ஆனால் பெறப்படவில்லை. மேலும், The Tamil Nadu Multistoried Buildings Rules 1973 (Rule 13) & Tamil Nadu District Municipalities Building Rules 1972 (Rule 12)–ன்படி வாகனங்கள் நிறுத்த இடம் அளிக்கப்படவில்லை. மேலும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் விதிகள் 2019, விதி 35 (4) ஆகியவற்றின்படி மேற்கண்ட கட்டிடங்கள் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் விதி மீறலுடன் தொடர்ந்து இயங்குவதை தடைசெய்ய தாம்பரம் மாநகராட்சிக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே விதி மீறி செயல்படும் மேற்கண்ட பார்டி ஹால் / திருமண மண்டபம் ஆகியவற்றின் மீது தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 –அன் கீழ் Lock & Seal நடவடிக்கையும் மற்றும் அரசாணை எண்.7 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 10.01.2023–ன்படி சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்குமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது எழுத்து பூர்வமான வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.''

6. மேலும், மனுதாரர் 04.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் சமர்ப்பித்த தனது எழுத்துபூர்வ வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''1) தாம்பரம் மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் வரும் பெருங்களத்தூர் மண்டலம் 4–க்கு உட்பட்ட பகுதியில் உள்ள அனுமதியற்ற வணிக கட்டிடங்கள் / பார்டி ஹால் உரிய அனுமதியின்றி மற்றும் விதிகளை மீறியும் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளன. பெருங்களத்தூர் காமராஜர் நெடுஞ்சாலை மற்றும் கலைஞர் நெடுஞ்சாலையானது அதிகமான போக்குவரத்து வாகனங்கள் செல்லும் சாலையாகும். இந்த சாலையில் உள்ள பார்ட்டி ஹால் / திருமண மண்டபத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறும் சமயத்தில், முறையான வாகனங்கள் நிறுத்துமிடம் இல்லாத நிலையில், சாலையில் வாகனங்களை நிறுத்துவதால் போக்குவரத்து இடைஞ்சல் ஏற்படுகிறது. மேலும், மேற்கண்ட பார்ட்டி ஹால் / திருமண மண்டபம் அமைந்துள்ள சாலைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தற்காலிக ஆக்கிரமிப்புகள் அகற்றிட தாம்பரம் மாநகராட்சி மண்டல நிர்வாகம் மற்றும் நகரமைப்பு பிரிவு

அலுவலர் ஆகியோர் ஆக்கபூர்வமான நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. அந்த சாலையினை பயன்படுத்தும் பொது மக்கள் மிகுந்த சிரமப்பட்டு செல்லும் நிலையில் உள்ளது. பொது போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் கட்டிடங்களின் விவரங்கள் பின்வருமாறு.

2) பெருங்களத்தூர் காமராஜர் நெடுஞ்சாலையில் க. எண் 12ல் ஸ்ரீபாலாம்பிகை பார்ட்டி ஹால் என்னும் வர்த்தக ரீதியான வணிக கட்டிடம் அமைந்துள்ளது. அந்த வணிக கட்டிடத்தின் கீழ் தளத்தில் தனியார் வங்கியும், முதல் தளத்தில் பெண்கள் அழகு நிலையமும், இரண்டாவது மற்றும் மூன்றாவது தளத்தில் பார்ட்டி ஹாலும் அமைந்துள்ளது. மேற்படி பார்ட்டி ஹால் இன் உரிமையாளர் N.R.R. லட்சுமிகாந்தன் என்பவர் பேரூராட்சியில் பெற்ற கட்டிட திட்ட அனுமதிக்கு மாறாக விதிகளை மீறி அனுமதியற்ற கட்டுமானத்தினை கட்டியுள்ளார். மேற்கண்ட உரிமையாளர் லட்சுமிகாந்தன் என்பவர் வணிக வளாகத்தை விதிமுறைகளுக்கு புறம்பாக பார்ட்டி ஹாலாக மாற்றம் செய்து பயன்படுத்தி வருகிறார்.

3) பெருங்களத்தூர் கலைஞர் நெடுஞ்சாலையில் க. எண் 10/50–ல் ஸ்ரீராதா பார்ட்டி ஹால் என்னும் வர்த்தக ரீதியான வணிக கட்டிடம் அமைந்துள்ளது. அந்த வணிக கட்டிடத்தின் கீழ் தளத்தில் ஐபாகோ என்ற ஐஸ்கிரீம் கடையும், முதல், இரண்டாவது மற்றும் மூன்றாம் தளத்தில் பார்ட்டி ஹாலும் அமைந்துள்ளது. மேற்படி பார்ட்டி ஹால் இன் உரிமையாளர் S. ராஜேஸ்வரி என்பவர் தாம்பரம் மாநகராட்சியின் 61வது வார்டு கவுன்சிலர் ஆவார். மேற்படி கவுன்சிலர் பேரூராட்சியில் பெற்ற கட்டிட திட்ட அனுமதிக்கு மாறாக விதிகளை மீறி அனுமதியற்ற கட்டுமானத்தினை கட்டியுள்ளார். மேற்கண்ட உரிமையாளர் ராஜேஸ்வரி என்பவர் வணிக வளாகத்தை விதிமுறைகளுக்கு புறம்பாக பார்ட்டி ஹாலாக மாற்றம் செய்து பயன்படுத்தி வருகிறார்.

4) பெருங்களத்தூர் கலைஞர் நெடுஞ்சாலையில் க. எண் 19–ல் கஸ்தூரி சண்முகம் திருமண மண்டபம் என்ற பெயரில் வணிக கட்டிடம் அமைந்துள்ளது. மேற்படி பார்ட்டி திருமண மண்டபத்தின் உரிமையாளர் கோமதி இளங்கோ என்பவர் பேரூராட்சியில் பெற்ற கட்டிட திட்ட அனுமதிக்கு மாறாக விதிகளை மீறி அனுமதியற்ற கட்டுமானத்தினை கட்டியுள்ளார். மேற்கண்ட பார்ட்டி ஹால் / திருமண மண்டபம் ஆகியவற்றில் இருபுறங்களிலும் அவசர கால வழிகள் ஏதும் அமைக்காமல், சட்ட விதிமுறைகளுக்கு எதிராக செயல்பட்டு வருகிறது.

5) மேற்கண்ட கட்டிட உரிமையாளர்கள் தொழில் வரி மட்டும் செலுத்தி வரும் நிலையில், மாநகராட்சியில் தொழில் உரிமம் மற்றும் தமிழ்நாடு அரசின் மற்ற துறைகளில் பெறப்பட வேண்டிய சான்றிதழ்கள் எதுவும் பெறாமல் இயங்கி வருகின்றன. மேற்கண்ட கட்டிடங்கள் யாவும் கட்டிடம் கட்டுவதற்கு நகர் ஊரமைப்பு துறையினரிடமிருந்து எந்தவொரு தொழில்நுட்ப அனுமதியும் பெறவில்லை. The Tamil Nadu Multi-Storied Building Rules, 1973 (Rule 13), Tamil Nadu District Municipalities Building Rules, 1972 (Rule 12) கட்டிட வளர்ச்சி கட்டுப்பாடு விதிமுறைகள் ஆகியவைகளில் கண்டுள்ளவாறு, வாகன நிறுத்துமிடங்கள் மனையிடத்திலேயே அதன் உரிமையாளரால் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு, மேற்கண்ட கட்டிடத்தின் உரிமையாளர்களால் வாகன நிறுத்துமிடம் அமைக்கப்படவில்லை. மேலும், ஒருங்கிணைக்கப்பட்ட வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019, தமிழ்நாடு அரசிதழின்படி, கல்யாண மண்டபம்

போன்ற பொது கட்டிடங்களுக்கு 6 மீட்டருக்கு குறையாமல் இடைவெளி இருக்க வேண்டும். ஆனால், மேற்கண்ட பார்ட்டி ஹால் / திருமண மண்டபம் ஆகியவை அரசின் விதியை பின்பற்றாமல் இயங்கி வருவதால், அவைகள் செயல்பட துளியும் தகுதியற்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

6) மேற்கண்ட கட்டிடங்கள் பெருங்களத்தூர் மண்டல நகரமைப்பு அலுவலர் மூலம் கள ஆய்வு செய்யப்பட்டு, விதிமீறல் கண்டறியப்பட்டதால், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56 மற்றும் 57ன் கீழ் (Notice For Production of Documents) தாக்கீது கட்டிட உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பார்ட்டி ஹால் / திருமண மண்டபம் ஆகியவை போதுமான அளவில் வாகனங்கள் நிறுத்துமிடம் வசதி இல்லாத காரணத்தினால் வேறு தகுதியான மாற்று இடம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு, அதன் விபரத்தினை தெரிவிக்குமாறும், மேற்கண்ட கட்டிட உரிமையாளர்களுக்கு தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019, விதி 35(4)–ன் கீழ் வாகன நிறுத்துமிடம் அமைத்து அறிக்கை தாக்கல் செய்யுமாறும், பெருங்களத்தூர் மண்டல நகரமைப்பு பிரிவு அலுவலர் முறையான அறிவிப்பு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. எனவே, மேற்கண்ட கட்டிடங்கள் யாவும் விதிமுறைகளுக்கு புறம்பாக தாம்பரம் மாநகராட்சி பெருங்களத்தூர் மண்டலத்தின் நகரமைப்பு பிரிவு அலுவலர்களின் அனுமதியுடன் இயங்கி வருகிறது என்பது தெரியவருகிறது.

7) தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971, மாண்பமை உயர்நீதிமன்ற ஆணைகள், அரசாணை G.O. (Ms.) No.07. Housing and Urban Development (UD4(1)) Department Dated 10.01.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019, விதி 35(4)–ன் ஆகியவற்றின்படி, மேற்கண்ட கட்டிடங்கள் மீது தொடர்நடவடிக்கை மேற்கொண்டு, விதிமீறலுடன் தொடர்ந்து இயங்குவதை தடை செய்து உத்தரவு பிறப்பித்துபோகுமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன். மேலும், பெருங்களத்தூர் பகுதியில் உள்ள அனுமதியற்ற பார்ட்டி ஹால் / திருமண மண்டபங்களை மண்டலத்தின் நகரமைப்பு அலுவலர் கண்காணித்திடவும், இதுபோல், அனுமதியற்ற வகையில் செயல்படும் கட்டிடங்களை களஆய்வின் மூலம் கண்டறிந்து, அவற்றின் மீது தொடர் நடவடிக்கையாக தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56(A)–ன் கீழ் மூடி முத்திரையிடும் நடவடிக்கை மேற்கொள்வதற்கு தாம்பரம் மாநகராட்சி ஆணையாளருக்கு உத்தரவு பிறப்பித்துபோகுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.'.

7. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவிப் பொறியாளர் 04.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"திரு. இரா. ஜெயராம் அவர்களின் முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள : –

1) பெருங்களத்தூர் கிராமம் கதவு எண் 10/50, கலைஞர் நெடுஞ்சாலையில் ஸ்ரீராதா மஹால் என்னும் பெயரில் உள்ள திருமண மண்டபம்,

இம்மண்டபத்தின் உரிமையாளர் திட்ட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டியுள்ளதால் இம்மண்டப உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 133 (5) 135, (1) , (2) தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளன.

2) க. எண் 12, காமராஜர் நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீ பாலாம்பிகை பார்ட்டி ஹால் என்னும் பெயரில் உள்ள திருமண மண்டபம் ,

இம்மண்டபத்தின் உரிமையாளர் திட்ட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டியுள்ளதால் இம்மண்டப உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 133 (5) 135, (1) , (2) தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளன.

3) க.எண் 19, கலைஞர் நெடுஞ்சாலையில் கஸ்தூரி சண்முகம் திருமண மண்டபம். இம்மண்டபம் அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ளதால் மண்டபத்தின் உரிமையாளருக்கு கட்டிடத்தின் பயன்பாட்டினை தொடராமல் இருக்கவும், விதிகளின்படி வரைபடத்துடன் உரிய கட்டிட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பிக்க கோரிய திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 135(1), (2)—ன்கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு உரிய நடவடிக்கையில் உள்ளது.

மேலும், தாக்கீதுகள் வழங்கப்பட்ட நிலையில் மேற்கண்ட பார்ட்டி ஹால் உரிமையாளர்கள் கால அவகாசம் கோரி மனு அளித்துள்ளனர். தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998—ன்படி புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து கட்டிடங்களின் மீது உரிய சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''.

8. இரண்டாம் எதிர்மனுதாரரான கஸ்தூரி திருமண மண்டபத்தின் மேற்பார்வையாளர் திருமதி கோமதி இளங்கோ என்பவர் 04.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:—

''மேற்கண்ட மண்டபம் அமைந்துள்ள கட்டிடம் சுமார் 40 வருடங்களுக்கு முன் எனது மாமனார் திரு.சண்முகம் அவர்களால் தொடங்கப்பட்டு அவர் காலத்திற்கு பின் எனது கணவரால் நிர்வகிக்கப்பட்டு தற்போது எனது மேற்பார்வையில் இயங்கி வருகிறது.

தாம்பரம் மாநகராட்சி மூலம் மார்ச் 2026 மத்தியில் தாக்கீது வரப்பெற்றபின் தான் எங்களுக்கு மேற்கண்ட மண்டபம் எனது மாமனார் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டியுள்ளார் என்பது தெரிய வந்தது. தற்போது இம்மண்டபத்தில் சுப நிகழ்ச்சிகள் மற்றும் பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு அனுமதி அளிப்பதில்லை.

மேற்கண்ட சூழ்நிலையில் எங்களது திருமண மண்டபத்தின் கட்டிடத்திற்கு வரன்முறை செய்ய தாம்பரம் மாநகராட்சிக்கு விண்ணப்பம் அளிக்க தயாராக உள்ளோம். வரன் முறை கிடைக்கும் பட்சத்தில் அதன்படி மண்டபத்திற்கு உரிய அனுமதி பெறப்படும். மனுதாரர் தெரிவித்ததற்கு மாறாக மேற்கண்ட திருமண மண்டபத்தில் வாகனங்கள் நிறுத்த போதிய இடவசதி தனியாக உள்ளது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''.

9. மூன்றாம் எதிர்மனுதாரரான ஸ்ரீபாலாம்பிகை பார்ட்டி ஹாலின் உரிமையாளர் திரு. N.R.R. லட்சுமிகாந்தன் என்பவர் 04.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“மேற்கண்ட எங்களது பார்டிஹால் கட்டிடத்திற்கு பெருங்களத்தூர் பேரூராட்சியில் 2015–ம் வருடம் வரைபட அனுமதி பெறப்பட்டது. தற்போது தாம்பரம் மாநகராட்சியால் கட்டிட விதி மீறல் குறிப்பிட்டு தாக்கீது வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் தெரிவித்ததற்கு மாறாக எங்களது மண்டபத்திற்கு பக்கத்திலேயே வாகனங்கள் நிறுத்த இடவசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் எங்கள் மண்டபத்தில் சிறியளவில் கட்டிட விதி மீறல் உள்ளது. அதற்கு கட்டிட வரன்முறை கோரி தமிழக அரசுக்கு விண்ணப்பம் அளிக்க தயார் நிலையில் உள்ளேன்.

மனுதாரர் உள்நோக்கத்துடனும், பணம் பறிக்கும் நோக்கத்துடன் இம்மனுவை இம்முறை மன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளார். மனுதாரர் ஏற்கனவே இது குறித்து மிரட்டல் விடுத்தது தொடர்பாக பீர்க்கன்காரணை காவல் நிலையத்தில் புகார் அளித்து மனுதாரர் மீது மோசடி வழக்கு பதியப்பட்டு CSR வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர் உள்நோக்கத்துடன் சமர்ப்பித்துள்ள அவரது மனுவினை தள்ளுபடி செய்யுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.”.

10. நான்காம் எதிர்மனுதாரரான ஸ்ரீராதா மஹால் உரிமையாளர் திருமதி S. ராஜேஸ்வரி சார்பாக அவரது கணவர் R.S. சங்கர் என்பவர் 04.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“மேற்கண்ட எங்களது பார்டிஹால் முதல்தளம் மற்றும் இரண்டாம் தளம் இரண்டும் முறைப்படி 2021–ம் ஆண்டு கமர்சியல் அங்கீகாரம் பெற்று முறைப்படி தாம்பரம் மாநகராட்சியால் உரிமம் பெற்று ஸ்ரீராதா மஹால் இயங்கி வருகிறது . தற்போது தாம்பரம் மாநகராட்சியால் கட்டிட விதி மீறல் குறிப்பிட்டு தாக்கீது வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் தெரிவித்ததற்கு மாறாக எங்களது மண்டபத்திற்கு பக்கத்திலேயே 100 மீட்டர் தொலைவில் வாகனங்கள் நிறுத்த இடவசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் எங்கள் மண்டபத்தில் சிறியளவில் கட்டிட விதி மீறல் உள்ளது. அதற்கு கட்டிட வரன்முறை கோரி தமிழக அரசுக்கு விண்ணப்பம் அளிக்க தயார் நிலையில் உள்ளேன்.

என்னுடைய மனைவி தாம்பரம் மாநகராட்சியில் வார்டு எண்.59க்கு மாமன்ற உறுப்பினராக பணியாற்றி வருகிறார். எங்கள் வார்டில் 100க்கும் மேற்பட்ட கட்டிடங்களில் விதிமீறல் என்று மேற்படி மனுதாரர் ஜெயராம் அவர்கள் மாநகராட்சியில் புகார் கொடுத்து மாநகராட்சி அதிகாரிகளிடமும் வணிக வளாக உரிமையாளர்களிடமும் பணம் பறிப்பதை தொழிலாக கொண்டுள்ளார். இது போல உள்நோக்கத்துடனும், பணம் பறிக்கும் நோக்கத்துடன் மனுவை இம்முறை மன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார். நான் இரண்டு வருடத்திற்கு முன்பு தான் இந்த சொத்தை கிரையம் பெற்றேன். என்னுடைய சொத்தின் பழைய உரிமையாளரிடம் மேற்படி ஜெயராம் அவர்கள் மிரட்டி இரண்டு இலட்சம் பணம்

கேட்டுள்ளார். அவர் அதில் உடல்நிலை பாதிக்கப்பட்டு வேறு வழியின்றி எனக்கு விற்பனை செய்துவிட்டார்.

எனவே, மனுதாரர் உள்நோக்கத்துடன் சமர்ப்பித்துள்ள அவரது மனுவினை தள்ளுபடி செய்யுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''.

**11.** முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எழுத்துபூர்வமான வாக்குமூலம், முதல் எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை, தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம், இரண்டாம் எதிர்மனுதாரரான கஸ்தூரி சண்முக திருமண மண்டபத்தின் மேற்பார்வையாளர் திருமதி கோமதி இளங்கோ என்பவரின் வாக்குமூலம், மூன்றாம் எதிர்மனுதாரரான ஸ்ரீபாலாம்பிகை பார்ட்டி ஹாலின் உரிமையாளர் திரு. N.R.R. லட்சுமிகாந்தன் மற்றும் நான்காம் எதிர்மனுதாரரான ஸ்ரீராதா மஹாலின் உரிமையாளர் திருமதி S. ராஜேஸ்வரி சார்பாக அவரது கணவர் திரு. R.S. சங்கர் என்பவர் அளித்த வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

தாம்பரம் மாநகராட்சி, பெருங்களத்தூர் கிராமம், கலைஞர் நெடுஞ்சாலை கதவு எண் 10/50–ல் அமைந்துள்ள வணிக கட்டிடத்தின் கீழ் தளத்தில் ஐபாகோ (ibaco) ஐஸ்கீரீம் கடையும், முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் தளத்தில் செயல்படும் ஸ்ரீராதா மஹால் திருமண மண்டபம் மற்றும் காமராஜர் நெடுஞ்சாலை க. எண் 12–ல் அமைந்துள்ள வணிக கட்டிடத்தின் கீழ் தளத்தில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா என்ற வங்கியும் மற்றும் மேல் தளங்களில் செயல்படும் ஸ்ரீபாலாம்பிகை பார்ட்டி ஹால் என்ற திருமண மண்டபம் கட்டிடங்களின் உரிமையாளர்கள் பேரூராட்சியில் பெற்ற கட்டிட திட்ட அனுமதிக்கு மாறாக விதிகளை மீறி கட்டிடங்கள் கட்டுப்பட்டுள்ளது என்பதும், கலைஞர் நெடுஞ்சாலை கதவு எண் 19–ல் அமைந்துள்ள வணிக கட்டிடத்தில் செயல்படும் கஸ்தூரி சண்முகா திருமண மஹால் என்ற திருமண மண்டபம் எவ்வித கட்டிட அனுமதியும் பெறாமலும் மற்றும் இம்மண்டபத்திற்கு இருபுறங்களிலும் அவசர கால வழிகள் ஏதும் விடாமலும் கட்டப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட மூன்று கட்டிடங்களின் உரிமையாளர்கள் தொழில்வரி மட்டும் செலுத்தியிருந்தாலும், மாநகராட்சியின் தொழில் உரிமம் மற்றும் தமிழ்நாடு அரசின் மற்ற துறைகளிலிடமிருந்து பெறப்பட வேண்டிய சான்றிதழ்கள் எதுவும் இல்லாமல் இயங்கி வருகின்றன என்பதும், மேற்படி திருமண மண்டபங்கள் அனைத்தும் வர்த்தக கட்டிடம் என்பதாலும் 3,000 சதுர அடிக்கு கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடம் என்பதாலும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் திட்ட அனுமதி பெறப்படவில்லை என்பதும், The Tamil Nadu Multistoried Buildings Rules 1973 (Rule 13) & Tamil Nadu District Municipalities Building Rules 1972 (Rule 12)–ன்படி வாகனங்கள் நிறுத்த இடம் அளிக்கப்படவில்லை என்பதும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் விதிகள் 2019, விதி 35 (4) ஆகியவற்றின்படி மேற்கண்ட கட்டிடங்கள் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் விதி மீறலுடன் தொடர்ந்து இயங்குவதை தடைசெய்ய தாம்பரம் மாநகராட்சிக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும், விதி மீறி செயல்படும் மேற்கண்ட பார்ட்டி ஹால் / திருமண மண்டபம் ஆகியவற்றின் மீது தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56 –அன் கீழ் Lock & Seal நடவடிக்கையும் மற்றும் அரசாணை எண்.7 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் 10.01.2023–ன்படி சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்குமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பதும் மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எழுத்துபூர்வமான வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருங்களத்தூர் கிராமம் கதவு எண் 10/50, கலைஞர் நெடுஞ்சாலையில் ஸ்ரீராதா மஹால் என்னும் பெயரில் உள்ள திருமண மண்டபத்தின் உரிமையாளர் திட்ட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டியுள்ளதால் இம்மண்டப உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 133 (5), 135 (1), (2) தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளன என்பதும், க. எண் 12, காமராஜர் நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீ பாலாம்பிகை பார்ட்டி ஹால் என்னும் பெயரில் உள்ள திருமண மண்டபத்தின் உரிமையாளர் திட்ட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டியுள்ளதால் இம்மண்டப உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 133 (5), 135 (1) , (2) தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளன என்பதும், க.எண் 19, கலைஞர் நெடுஞ்சாலையில் கஸ்தூரி சண்முகம் திருமண மண்டபம் கட்டிட அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ளதால் மண்டபத்தின் உரிமையாளருக்கு கட்டிடத்தின் பயன்பாட்டினை தொடராமல் இருக்கவும், விதிகளின்படி வரைபடத்துடன் உரிய கட்டிட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பிக்க கோரிய திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 135(1), (2)–ன்கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு உரிய நடவடிக்கையில் உள்ளது என்பதும், தாக்கீதுகள் வழங்கப்பட்ட நிலையில் மேற்கண்ட பார்ட்டி ஹால் உரிமையாளர்கள் கால அவகாசம் கோரி மனு அளித்துள்ளனர் என்பதும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ன்படி புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து கட்டிடங்களின் மீது உரிய சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், முதல் எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

கஸ்தூரி திருமண மண்டபம் அமைந்துள்ள கட்டிடம் சுமார் 40 வருடங்களுக்கு முன் தனது மாமனார் திரு.சண்முகம் என்பவரால் தொடங்கப்பட்டு, அவருக்கு பின் தனது கணவரால் நிர்வகிக்கப்பட்டு தற்போது தனது மேற்பார்வையில் இயங்கி வருகிறது என்பதும், மார்ச் 2026–ல் தாம்பரம் மாநகராட்சியிடமிருந்து தாக்கீது வரப்பெற்றபின் தான் தங்களுக்கு மேற்கண்ட மண்டபம் தனது மாமனார் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டியுள்ளார் என்பது தெரிய வந்தது என்பதும், தற்போது இம்மண்டபத்தில் சுப நிகழ்ச்சிகள் மற்றும் பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு அனுமதி அளிப்பதில்லை என்பதும், இச்சூழ்நிலையில் இத்திருமண மண்டபத்தின் கட்டிடத்திற்கு வரன்முறை செய்ய தாம்பரம் மாநகராட்சிக்கு விண்ணப்பம் அளிக்க தயாராக உள்ளோம் என்பதும், வரன் முறை கிடைக்கும் பட்சத்தில் அதன்படி மண்டபத்திற்கு உரிய அனுமதி பெறப்படும் என்பதும், மனுதாரர் தெரிவித்ததற்கு மாறாக மேற்கண்ட திருமண மண்டபத்தில் வாகனங்கள் நிறுத்த போதிய இடவசதி தனியாக உள்ளது என்பதும் இரண்டாவது எதிர்மனுதாரரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

தங்களது ஸ்ரீபாலாம்பிகை பார்ட்டி ஹால் கட்டிடத்திற்கு பெருங்களத்தூர் பேரூராட்சியில் 2015–ம் வருடம் வரைபட அனுமதி பெறப்பட்டது என்பதும், தற்போது தாம்பரம் மாநகராட்சியால் கட்டிட விதி மீறல் குறிப்பிட்டு தாக்கீது வழங்கப்பட்டது என்பதும், மனுதாரர் தெரிவித்ததற்கு மாறாக தங்களது மண்டபத்திற்கு பக்கத்திலேயே வாகனங்கள் நிறுத்த இடவசதி செய்யப்பட்டுள்ளது என்பதும், இம்மண்டபத்தில் சிறியளவில் கட்டிட விதி மீறல் உள்ளது என்பதால், அதற்கு கட்டிட வரன்முறை கோரி தமிழக அரசுக்கு விண்ணப்பம் அளிக்க தயார் நிலையில் உள்ளார் என்பதும், மனுதாரர் உள்நோக்கத்துடனும், பணம் பறிக்கும் நோக்கத்துடன் இம்மனுவினை சமர்ப்பித்துள்ளார் என்பதும், மனுதாரர் ஏற்கனவே இது குறித்து மிரட்டல் விடுத்தது தொடர்பாக பீர்க்கன்காரணை காவல் நிலையத்தில் புகார்

அளித்து மனுதாரர் மீது மோசடி வழக்கு பதியப்பட்டு CSR வழங்கப்பட்டது என்பதும், எனவே, மனுதாரர் உள்நோக்கத்துடன் சமர்ப்பித்துள்ள அவரது மனுவினை தள்ளுபடி செய்யுமாறு கோரியிருப்பது மூன்றாம் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

ஸ்ரீராதா மஹாலின் முதல்தளம் மற்றும் இரண்டாம் தளம் இரண்டும் முறைப்படி 2021–ம் ஆண்டு கமர்சியல் அங்கீகாரம் பெற்று முறைப்படி தாம்பரம் மாநகராட்சியால் உரிமம் பெற்று இயங்கி வருகிறது என்பதும், தற்போது தாம்பரம் மாநகராட்சியால் கட்டிட விதி மீறல் குறிப்பிட்டு தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் தெரிவித்ததற்கு மாறாக இம்மண்டபத்திற்கு பக்கத்திலேயே 100 மீட்டர் தொலைவில் வாகனங்கள் நிறுத்த இடவசதி செய்யப்பட்டுள்ளது என்பதும், இம்மண்டபத்தில் சிறியளவில் கட்டிட விதி மீறல் உள்ளதால், அதற்கு கட்டிட வரன்முறை கோரி தமிழக அரசுக்கு விண்ணப்பம் அளிக்க தயார் நிலையில் உள்ளனர் என்பதும், தன்னுடைய மனைவி தாம்பரம் மாநகராட்சியில் வார்டு எண்.59க்கு மாமன்ற உறுப்பினராக பணியாற்றி வருகிறார் என்பதும், அவ்வார்டில் 100க்கும் மேற்பட்ட கட்டிடங்களில் விதிமீறல் என்று மேற்படி மனுதாரர் திரு.ஜெயராம் என்பவர் மாநகராட்சியில் புகார் கொடுத்து மாநகராட்சி அதிகாரிகளிடமும் வணிக வளாக உரிமையாளர்களிடமும் பணம் பறிப்பதை தொழிலாக கொண்டுள்ளார் என்பதும், இது போல உள்நோக்கத்துடனும், பணம் பறிக்கும் நோக்கத்துடன் இம்மனுவை மனுதாரர் சமர்ப்பித்துள்ளார் என்பதும், இரண்டு வருடத்திற்கு முன்பு தான் இந்த சொத்தை கிரையம் பெற்றதாகவும், இச்சொத்தினை பழைய உரிமையாளரிடம் மேற்படி மனுதாரரான ஜெயராம் என்பவர் மிரட்டி பணம் கேட்டதால், பழைய உரிமையாளர் உடல்நிலை பாதிக்கப்பட்டு வேறு வழியின்றி தனக்கு விற்பனை செய்துவிட்டார் என்பதும், மனுதாரர் உள்நோக்கத்துடன் சமர்ப்பித்துள்ள அவரது மனுவினை தள்ளுபடி செய்யுமாறு கோரியிருப்பது நான்காம் எதிர்மனுதாரரான ஸ்ரீராதா மஹாலின் உரிமையாளர் திருமதி S. ராஜேஸ்வரி என்பவர் சார்பாக அவரது கணவர் திரு. R.S. சங்கர் அளித்த வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருங்களத்தூர் கிராமம் கதவு எண் 10/50, கலைஞர் நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீராதா மஹால் மற்றும் க. எண் 12, காமராஜர் நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீ பாலாம்பிகை பார்ட்டி ஹால் ஆகிய திருமண மண்டபங்கள் கட்டிட திட்ட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டியுள்ளதால் இம்மண்டப உரிமையாளர்களுக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 133 (5), 135 (1), (2) தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும், க.எண் 19, கலைஞர் நெடுஞ்சாலையில் கஸ்தூரி சண்முகம் திருமண மண்டபம் கட்டிட அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ளதால் மண்டபத்தின் உரிமையாளருக்கு கட்டிடத்தின் பயன்பாட்டினை தொடராமல் இருக்கவும், விதிகளின்படி வரைபடத்துடன் உரிய கட்டிட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பிக்க கோரிய திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 135(1), (2)–ன்கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டது என்றும், இவ்வாறு தாக்கீதுகள் வழங்கப்பட்ட நிலையில் மேற்கண்ட பார்ட்டி ஹால் உரிமையாளர்கள் கால அவகாசம் கோரி மனு அளித்துள்ள நிலையில், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ன்படி புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து கட்டிடங்களின் மீது உரிய சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என முதல் எதிர்மனுதாரர் தாம்பரம் மாநகராட்சி சார்பில் ஆஜரான உதவிப் பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, விதி மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் மாண்பமை உயர்நீதிமன்றங்கள்

வழிகாட்டுதல்களின்படி உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையாளருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. இரா. ஜெயராம்,
கதவு எண் 43, என்.ஜி.ஓ. காலனி,
4வது தெரு, ஆர்.எம்.கே. நகர்,
புது பெருங்களத்தூர், சென்னை–600 063.

(2) ஆணையர், தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு,
தாம்பரம் மேற்கு, சென்னை–600 045.

(3) உதவி ஆணையாளர்,
மண்டலம் 4, தாம்பரம் மாநகராட்சி,
சென்னை–600 063.

(4) திருமதி கோமதி இளங்கோ,
மேற்பார்வையாளர், கஸ்தூரி சண்முகம் திருமண மண்டபம்,
கதவு எண்.4, சிவசங்கரன் தெரு,
சீனிவாச நகர், புது பெருங்களத்தூர், தாம்பரம்.

(5) திரு. N.R.R. லட்சுமி காந்தன்,
உரிமையாளர், ஸ்ரீபாலம்பிகை பார்ட்டி ஹால்,
கதவு எண்.23/12, காமராஜர் நெடுஞ்சாலை,
புது பெருங்களத்தூர், சென்னை–600 063.

(6) திருமதி S.ராஜேஸ்வரி, க/பெ திரு. R.S.சங்கர்
உரிமையாளர், ஸ்ரீராதா மஹால்,
கதவு எண்.10/50, கலைஞர் நெடுஞ்சாலை,
சீனிவாச நகர், பீர்க்கன்கரணை, சென்னை–600 063.

(7) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(8) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

6/7/26
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032